

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் நடைபெற்ற மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல். ஏ வை அறிமுகப்படுத்தி சிறப்புரை ஆற்றினார். மேடையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.முகம்மது மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# மானாமதுரை தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி செயல் வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, ஏப். 6 -

வருகிற ஏப்ரல் 23ம்தேதி தமிழக சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 234சட்டமன்ற தொகுதிகளில் வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இதில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளராக கழகத்தின் சார்பில் தற்போதைய எம்.எல்.ஏ. திருமதி தமிழரசி ரவிக்குமார் இரண்டாவது முறையாக போட்டியிடுகிறார்.

அவரை ஆதரித்து மானாமதுரை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி செயல் வீரர்கள் கூட்டம் திருப்புவனம், மானாமதுரை இளையான்குடி ஆகிய ஊர்களில் ஒன்றிய, நகர் பேரூர் நிர்வாகிகள் கூட்டம் சிவகங்கை மாவட்டகழக செயலாளர் அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் திருமதி தமிழரசி ரவிக்குமாரை அறிமுகப்படுத்தி அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:

நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் நமது கூட்டணி கட்சியினர் தேர்தல் பணி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காக இந்த செயல் வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இதில் நமதுபலம், பலவீனம் ஆகியவற்றை நாம் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். அதை சரி செய்து நாம் தேர்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு தேர்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

கழகத் தலைவர் முதல்வர் தளபதி தலைமையிலான மக்கள் ஆட்சி தொடர வேண்டும்.முதல்வர் பதவி நேரடியாக தேர்ந்து எடுக்கப்படுவதில்லை. சட்டமன்ற உறுப்பினரால் முதல்வர் தேர்ந்தெடுக்கப் படுகிறார் எனவே இத்தொகுதியில் போட்டியிடும் திருமதி தமிழரசி ரவிக்குமாரை வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

கழகத் தலைவர் தளபதி தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அனைத்துதரப்பு மக்களையும் அரவணைத்து செல்லும் அரசாக உள்ளது. மொழி, மதம், இனம் என்று மக்களை பிரித்து பார்ப்பதில்லை. இந்தியாவில் பா.ஜ.க.ஆளும் மாநிலங்களில் இத்தகைய பாகுபாடு உள்ளது. ஆனால் பா.ஜ.க. பலவழிகளில் முயற்சி த்தும் தமிழகத்தில் கால்ஊன்றிமுடியவில்லை. இதனால் அ.தி.மு.க என்ற முகமூடியால் உள்ளே நுழைய திட்டமிட்டு ள்ளது. அதை தமிழக மக்கள் முறியடிப்பார்கள். அந்த சக்தி நமது தலைவர் முதல்வர் தளபதி தலைமையிலான கூட்டணிக்கு மட்டுமே உள்ளது.

பா.ஜ.க.தமிழகத்தில் நுழைந்தால் பீகார் முதல்வர் நிதிஷ் குமார் கதிதான் ஏற்படும்.

இதை அ.தி.மு.கவனர் உணர்ந்து கொள்ள வேண்டும். அ.தி.மு.க.கட்சியை எடப்பாடி பழனிசாமி தனது சுயலாபத்திற்காக பா.ஜ.கவிடம் அடகு வைத்து விட்டார். அந்த அடகுக் கடையிலிருந்து அ.தி.மு.க.வை மீட்க முடியாது. இதை தமிழக மக்கள் நன்றாக புரிந்து கொண்டுள்ளனர். எனவே இத்தேர்தலில் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணியை அப்புறப்படுத்த வேண்டும். இவ்வாறு அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த சேங்கைமாறன், சஞ்சய் காந்தி, செல்லப்பாண்டியன் , நாகராஜன்,காங்கிரஸ், ஹைதர் அலி அம்பலம், அழகர் சாமி சி.பி.எம்,முஸ்லிம் லீக்,பாலையா,வி.சி.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பேசினார்கள். இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ். மாரியப்பன்கென்னடி, நகர் கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் திருமதி வசந்தி சேங்கை மாறன், எம்.ஏ.கடம்பசாமி, துரை. ராஜாமணி, மா.அண்ணாத்துரை, அ.முத்துச்சாமி,ஆறு. செல்வராசன், வே.தமிழ் மாறன், காவெங்கட்ராமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தா. ராமையா, அ.முகம் மது, பொதுக்குழு உறுப்பினர்கள் த.உதயக்குமார்,

ஏ.ஆர்.ஜெயமூர்த்தி, கு.ராசாங்கம்,பேரூர் கழக செயலாளர்கள் நாகூர் கனி, பி.ஏ.நஜ்முதீன், நகர் மன்ற துணை தலைவர் பாலா சுந்தர்,பேரு ராட்சி மன்ற துணை தலைவர் இபுராகீம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் எம். முருகானந்தம்,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி, சுப. அன்பரசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மகாதீர், ஒன்றிய, நகர், பேரூர் கழக நிர்வாகிகள் சுப.தமிழரசன், காளிமுத்து, வே.கருனாகரன், அண்ணாமலை, ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துகுமார், மலைமேகு, அய்யாசாமி, ரவிச்சந்திரன், பாஸ்கரன், மூர்த்தி, தொண்டர்அணி புலி க்குட்டி, மாரிச்சாமி,கார்த்தி, அன்னவாசல் சண்முகம், இளைஞரணி பசீர் தாயமங்கலம் சத்தியேந்திரன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூரில்

# வேட்பாளர் கே.எஸ்.மூர்த்தி இருசக்கர வாகனத்தில் வீடு வீடாக வாக்குச் சேகரிப்பு!

நாமக்கல், ஏப்.6-

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் தொகுதியில் நாமக்கல் மேற்கு மாவட்க் கழகப் பொறுப்பாளரும், கழக வேட்பாளருமான கே.எஸ். மூர்த்தி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான இவர், இம்முறை மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார். பரமத்தி வேலூர் பொத்தனூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில், இருசக்கர வாகனத்தில் வீதி வீதியாகச் சென்று நிர்வாகிகளுடன் இணைந்து வீடு வீடாக வாக்குச் சேகரித்தார். அவரது இந்த எளிமையான பிரச்சார முறையை அப்பகுதி மக்கள், உற்சாகமாக வரவேற்றனர். இந்நிகழ்வில் திமுக நிர்வாகிகள் வைரமணி, அருண், அருள், கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி, புலியகுளம் பகுதி, வடக்கு அம்மன் குளம், எரிமேடு, ராஜீவ் நகர், கலைவாணி நகர் உள்ளிட்ட பகுதிகளில் கழக வேட்பாளர், வி.செந்தில் பாலாஜி வீதி, வீதியாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், பகுதி கழக பொறுப்பாளர் தேவசீலன், மாமன்ற உறுப்பினர் நவீன் முருகன் உள்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் 2026

## தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

# தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | நேரம் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 6.4.2026 | மாலை 4.00 மணி | சென்னை தெற்கு | மதுரவாயல் |
| ” | மாலை 5.00 மணி | சென்னை கிழக்கு | அம்பத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சென்னை வடகிழக்கு | மாதவரம் |
| ” | மாலை 7.00 மணி | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர் |
| ” | இரவு 8.00 மணி | சென்னை கிழக்கு | திரு.வி.க.நகர் |
| 7.4.2026 | காலை 10.00 மணி | திருவள்ளூர் மேற்கு | திருத்தணி |
| ” | பகல் 12.00 மணி | இராணிப்பேட்டை | சோளிங்கர் |
| ” | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | ஆரணி |
| ” | மாலை 6.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | போளூர் |
| ” | இரவு 8.00 மணி | ” | கலசப்பாக்கம் |
| 8.4.2026 | காலை 10.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் |
| ” | பகல் 12.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | சங்கராபுரம் |
| ” | மாலை 4.00 மணி | சேலம் கிழக்கு | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சேலம் மத்திய | சேலம் தெற்கு |
| ” | இரவு 8.00 மணி | ” | சேலம் மேற்கு |
| 9.4.2026 | காலை 10.00 மணி | நாமக்கல் கிழக்கு | நாமக்கல் |
| ” | பகல் 12.00 மணி | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் |
| ” | மாலை 4.00 மணி | ஈரோடு மத்திய | பவானி |
| ” | மாலை 6.00 மணி | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு |
| ” | மாலை 7.00 மணி | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடலூரில் பிரச்சாரம்!

## மாவட்டக் கழக செயலாளர்- சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், ஏப். 6 -

கழகத் தலைவர் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து நாளை 07.04.2026 செவ்வாய்கிழமை அன்று காலை 9 மணியளவில் கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் வேட்பாளர்களை அறிமுகம் செய்து மாபெரும் பொதுக்கூட்டத்தில் வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரிக்கிறார்.



அதுசமயம் கடலூர் மேற்கு மாவட்டத்தில் அடங்கியுள்ள திட்டக்குடி விருத்தாசலம் நெய்வேலி பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதி மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு,பொது குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள் நிர்வாகிகள் மாவட்ட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் மாநில, மாவட்ட , ஒன்றிய , நகர,பேரூர், கிளை , வார்டு கழக தலைவர்கள் செயலாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் சி.வி. கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் வேட்புமனு தாக்கல்!

## மாவட்டச் செயலாளர் – வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி, ஏப். 6 -

செஞ்சி சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் இன்று 6 ஆம்தேதி வேட்பு மனு தாக்கல் செய்கிறார். திமுகவேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ அழைப்பு.

இது குறித்து அவரது அறிக்கையில்கூறுகையில்

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின்,துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆசியுடன்ள திர்வரும் 23ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. சார்பில் செஞ்சி சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளராக விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ போட்டியிடுகிறார்.

செஞ்சி தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ இன்று 6 ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்கிறார்.



இதையடுத்து அன்று செஞ்சி சிங்கவரம் சாலை புனித மிக்கேல் பள்ளி எதிரி இருந்துஊர்வலமாக சென்று செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்யும் நிகழ்ச்சி நடைபெறுகிறது இந்நிகழ்ச்சியில் மதச்சார்பற்றமுற்போக்குகூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பேரூராட்சி செயலாளர்கள்,

செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணி பொறுப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற நிர்வாகி கள்கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், செஞ்சி சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் தொகுதியில் மதச்சார்பற்ற கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அ.செ.வில்வநாதன் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.